தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

<u>ஆணை நாள் 03.06.2025</u>

<u>**முன்னிலை**</u>

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

<u>**வழக்கு எண். SA 5743/B/2018**</u>

திரு.ச.பவேஷ் கண்ணன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம் 627 001. — பொது அதிகார அமைப்பு

<u>**ஆணை**</u>

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 21.03.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொது தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் 28.05.2025 அன்று நேரில் ஆஜராகி, விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

- மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)ல், சாலை விபத்தில் மரணமடைந்த திரு.கு.சந்தோஷம் அவர்கள் விபத்துக்குள்ளான நிலையில் அவர் பயன்படுத்தி விபத்தில் சேதமடைந்த மிதிவண்டியின் புகைப்படம் மற்றும் அன்றைய விபத்துக்கு காரணமான வாகனத்தின் பெயர், அதன் புகைப்படம், வாகனப்பதிவு சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமம் நகல் உள்ளிட்ட தகவல்களை 22.03.2018 தேதியிட்டு கோரியுள்ளார். மேற்படி மனுதாரர் கோரிய தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலர், 16.05.2018ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி நிலைய குற்ற எண்.32/18 u/s.304(A)Ipc வழக்கில் தாங்கள் மனுதாரரோ அல்லது எதிர்மனுதாரரோ இல்லை, தாங்கள் சம்மந்தமில்லாத பிறர் சம்மந்தப்பட்ட தகவல்களை தங்களுக்கு வழங்க 8(1)(j)-ன்படி இயலாது என்று தகவல் அளித்துள்ளார்.

- மேற்படி தகவல்களை பெற்றுக்கொண்ட மனுதாரர், 05.06.2018 தேதியிட்ட அவரது முதல் மேல்முறையீட்டு மனுவில், இறந்துபோன திரு.கு.சந்தோஷம் தனது பெரியப்பா மகன் என்றும், ஆகவே அத்தகவல்கள் மூன்றாம் நபரின் தனிப்பட்ட தகவல்கள் அல்ல என்றும், தகவல்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் மனு தாக்கல் செய்துள்ளார்.

- பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் பிறர் சம்மந்தப்பட்ட தகவல்களை கோரியுள்ளதால் தகவல்கள் வழங்க இயலாது என்று தகவல் அளித்துள்ள நிலையில், மனுதாரர் அவரது முதல் மேல்முறையீட்டு மனுவில், இறந்துபோன திரு.கு.சந்தோஷம் தனது பெரியப்பா மகன் என்று தெரிவித்துள்ளதை தொடர்ந்து உரிய தகவல்கள் வழங்கியிருக்கவேண்டும். அல்லது மனுதாரரை தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு, மனுதாரருக்கும் இறந்துபோன திரு.கு.சந்தோஷம் என்பவருக்கும் உள்ள உறவின்முறையை தெரிந்துக்கொண்டு, அதற்கேற்றாற்போல் தகவல்களை வழங்கியிருக்கவேண்டும்.

- உரிய காலத்தில் தகவல்கள் வழங்காமல், மனுதாரர் நீதிமன்றத்தை அணுகிய பிறகே பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டது என்றும், இதனால் இறந்துபோனவரின் குடும்பத்திற்கு கிடைக்கவேண்டிய நிவாரணத்தொகை உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாததால், ஏற்கனவே தனது குடும்ப உறுப்பினரை இழந்துவிட்டநிலையில், மேலும் அவர்களுக்கு மிகுந்த மனஉளைச்சல் ஏற்பட்டதாக, மனுதாரர் தெரிவித்ததை இவ்வாணையம் கருத்தில்கொண்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(பி)-ன்படி ரூ.10,000/- இழப்பீடாக ஏன் பொதுத் தகவல் அலுவலர் மீது விதிக்கக்கூடாது என்பதற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு 21.03.2025 அன்று மேற்கொண்ட விசாரணையில் உத்தரவிடப்பட்டிருந்தது.

- மேற்படி பிறப்பிக்கட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் 28.05.2025 அன்று, சமர்ப்பித்த விளக்க அறிக்கையினை இவ்வாணையம் பரிசீலனை செய்ததில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள 22.03.2018ம் தேதிய காலகட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட பொது தகவல் அலுவலராக திரு.பா.உதயகுமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) அவர்கள் இருந்துள்ளார் எனவும், தமிழ்நாடு தகவல் ஆணைய உத்தரவின் படி, அப்போதைய பொது தகவல் அலுவலரான திரு.பா.உதயகுமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது எனவும், அவர் தனது விளக்கத்தில் மனுதாரரான திரு.ச.பவேஷ் கண்ணன் என்பவர் 22.03.2018 தேதியிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பி கடந்த 28.03.2018 அன்று திருநெல்வேலி மாவட்ட காவல் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுவில் 06.02.2018 அன்று பழவூர் காவல் நிலைய எல்லைக்குள் நிகழ்ந்த சாலை விபத்தில் தனது சகோதரர் திரு.கு.சந்தோசம் இறந்து போனது தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட பழவூர் காவல் நிலைய குற்ற எண்.32/2018 வழக்குத் தொடர்பாக சில தகவல்கள் வழங்கும்படி கோரியிருந்தார் எனவும், அம்மனுவானது வள்ளியூர் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் / உதவி பொது தகவல் அலுவலருக்கு உரிய தகவல்களை வழங்கக் கோரி குறிப்பாணை எண்.C.No.501-DCRB-TIN-RTI-2018 நாள்.28.03.2018ன் பிரகாரம் அனுப்பப்பட்டது எனவும், இந்நிலையில் தூத்துக்குடியில் இயங்கி வந்த ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எதிராகப் பொது மக்கள் நடத்திய தொடர் போராட்டத்தின் எதிரொலியாக கூடங்குளம், பழவூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கூடுதாழை, இடிந்தகரை உள்ளிட்ட சில கடற்கரை கிராமங்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், அப்பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டம் ஒழுங்கு பிரச்சனை நிலவியது எனவும், எனவே மேற்படி மனுவின் மீதான அறிக்கையைப் பெறுவதில் காலதாமதம் நேரிட்டது எனவும், இருப்பினும் வள்ளியூர் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் மற்றும் பழவூர் காவல் நிலைய உதவி ஆய்வாளருக்கு தொடர் நினைவூட்டுகள் அனுப்பி உதவி ஆய்வாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மேற்கொண்டு எவ்வித கால தாமதமின்றி மனுதாரரின மனுவிற்கான தகவல்கள் வழங்கப்பட்டது எனவும் தெரிவித்தார். மேலும், மனுதாரரின் மனுவில் தனது பெயரின் முதல் எழுத்து “ ச “ பவேஷ் கண்ணன் என்று குறிப்பிட்டுள்ளது எனவும், ஆனால்

தனது மனுவின் துவக்கத்தில் தனது சகோதரர் இறந்து போன திரு.கு.சந்தோசம் மனுதாரரான திரு.ச.பவேஷ் கண்ணனின் உடன்பிறந்த சகோதரர் இல்லையென்பது தெளிவாகிறது எனவும், எனவே தான் மனுதாரர் பழவூர் காவல் நிலைய குற்ற எண்.32/2018 வழக்கில் மனுதாரரோ அல்லது எதிர் மனுதாரரோ இல்லையென்பதால், தங்கள் சம்மந்தமில்லாத பிறர் சம்மந்தப்பட்ட தகவல்களை தங்களுக்கு தகவல் அறியும் உரிமை சட்டப்பிரிவு 8(1) (j)ன் படி வழங்க இயலாது என்ற தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் எனத் தெரிவித்துள்ளதை இவ்வாணையம் ஏற்க மறுக்கின்றது. மனுதாரர் அவரது முதல் மேல்முறையீட்டு மனுவில், தனக்கும், இறந்துபோன திரு.கு.சந்தோஷம் என்பவருக்குமான உறவின்முறையை தெரிவித்திருந்த நிலையிலும், அதுகுறித்து விசாரணை செய்யாமல், தகவல் வழங்க மறுத்துள்ளதாகவே இவ்வாணையம் தனது கருத்தினை பதிவு செய்கின்றது.

- மனுதாரர் கோரிய திரு.கு.சந்தோஷம் என்பவர் சாலை விபத்தில் இறந்தபோது, அவர் பயன்படுத்திய மிதிவண்டியின் புகைப்படம் மற்றும் அன்றைய விபத்துக்கு காரணமான வாகனத்தின் பெயர், அதன் புகைப்படம், வாகனப்பதிவு சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமம் நகல் ஆகிய தகவல்கள் மனுதாரர் 6(1)மனு தாக்கல் செய்தபோது குறிப்பட்ட காலத்திற்குள் வழங்கியிருந்தால், உடனடியாக அந்த விபத்திற்கான நிவாரணம் இறந்துபோனவரின் குடும்பத்திற்கு கிடைத்திருக்கக்கூடும். ஆனால் காலம்கடந்து தகவல்கள் வழங்கியதால், ஏற்கனவே தனது குடும்ப உறுப்பினரை இழந்து மனவேதனையில் உள்ள குடும்பத்திற்கு, தகவல் வழங்காத அன்றைய பொதுத் தகவல் அலுவலரின் செயல், மீண்டும் மனஉளைச்சல் ஏற்படுத்தியதாக இவ்வாணையம் பதிவு செய்கின்றது.

- இறந்துபோனவரின் குடும்பத்திற்கு, உரிய நேரத்திற்குள் நிவாரணம் கிடைக்கப்பெறவேண்டியே, மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்துள்ள நிலையில், தகவல் வழங்கப்படாததால், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, தகவல்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலையை பொதுத் தகவல் அலுவலர் ஏற்படுத்தியது, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும், வலுவிழக்கசெய்வதாகவே இவ்வாணையம் பார்க்கின்றது.

- ***ஆகவே, காலம் கடந்து தகவல்கள் வழங்கியதால் பாதிக்கப்பட்டவரின் குடும்பம் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானதற்கு காரணமான அன்றைய பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(8)(b)-இன் படி ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) இழப்பீடு விதித்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது. இழப்பீடு தொகையை பொது அதிகார அமைப்பிலிருந்து மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலை தற்போதைய பொது தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் மூலம் ஆணையத்திற்கு 24.07.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு, இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5743/B/2018</u>**

**<u>பெறுநர்</u>**

காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம் 627 001.

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம் 627 001.

திரு.ச.பவேஷ் கண்ணன்
வழக்கறிஞர்
எண்.315, கூடுதல் வழக்கறிஞர் அறை
(No.315, Addl.Law Chambers)
உயர்நீதிமன்றம், சென்னை 600 104.

Copy to: File

VMPA - 18/06/2025